

சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம், செஞ்சேரி புத்தூர் வடுகபாளையத்தில், ரூ 11.00 லட்சம் மதிப்பில், அங்கன்வாடி மையம் செஞ்சேரி முதல் ஆவின் பால் கம்பெனி வரை, ரூ 32.60 லட்சம் மதிப்பில், 2.70 கிலோமீட்டர் தார் சாலை குமாரபாளையத்தில், ரூ 17.00 லட்சம் மதிப்பில், அங்கன்வாடி மையம் ஆகியவற்றை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார் மேலும் சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம், சின்னமநாயக்கன் பாளையத்தில், ரூ 32.80 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்து சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம், சின்னமநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கினார். உடன் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி வெளிங்டன் ஏரிக்கு தொடர் கன மழையினால் நீர்வரத்து அதிகரித்ததனால் அணையின் நலன் கருதி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தண்ணீரை திறந்து வைத்தார். உடன் நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மங்களூர் ஒன்றியக் கழக செயலாளர்கள் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், பா. செங்குட்டுவன், திட்டக்குடி நகரக் கழகச் செயலாளர் வி.பி.பி.பரமகுரு, மங்களூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கே.எம்.டி.சங்கர், கோனூர் பூ.மதியழகன் உள்ளிட்ட ஒன்றிய கழக, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மாவட்டத்தில் கனமழை!

# பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு!

## அமைச்சர் கோவி.செழியன் – துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. மேற்கொண்டனர்!

தஞ்சாவூர், டிச.15-

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினருமான துரை. சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

உயர் கல்வித் துறை அமைச்சர் திருவையாறு வட்டம், நடுக்காவேரி அரசு நடுநிலைப் பள்ளி பாதுகாப்பு மையத்தில் தங்க வைத்துள்ள பொதுமக்களை நேரில் பார்வையிட்டு குறைகளை கேட்டு அறிந்தார், தொடர்ந்து வரகூர் கோணக்கடுங்கலாற்றில் நீர்வரத்து அதிகமாக செல்வதையும். வயல்வெளிகளில் மழை நீர் சூழ்ந்துள்ள இடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக உயர்கல்வித் துறை அமைச்சர், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம் வேளூர் மற்றும் நல்லாதடி பகுதிகளில் பழவாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதையும், மணல் மூட்டைகள் அடுக்கும் பணிகள் நடைபெறு வதையும் பார்வையிட்டார்கள். தொடர்ந்து பழவாறு கரையை ஒட்டிய பகுதிகளான நல்லாதடி, வேளூர், மடப்புரம், ஆகிய நீர் சூழ்ந்த பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் மழையின் பாதிப்பு காரணமாக சேதம் அடைந்த நான்கு வீடுகளுக்கு தலா 8,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக்கிணங்க, வடகிழக்கு பருவமழையில் ஏற்படும் பாதிப்புகளை மேற்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பழவாறு சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் மழை நீர் வடிய ஏதுவாக இருந்து வருகிறது. மழைக்காலங்களில் இந்த பழவாற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தும் விதத்தில் வருங்காலங்களில் ஆற்றின் இரு கரையையும் வலுப்படுத்தி முழுமையாக தூர்வார உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். தற்போது ஏற்பட்டுள்ள உடைப்பு மற்றும் தண்ணீர் கசிவு உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்த பொதுப்பணித்துறை மூலமாகவும், மாவட்ட நிர்வாகம் மூலமாகவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கடந்த 2010ம் ஆண்டுக்கு பிறகு கன மழை காரணமாக பழவாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் பாதிப்படைந்துள்ள இப்பகுதி மக்களை இரண்டு இடங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு அதில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தை பொருத்தவரை 348 இடங்களில் சிறப்பு முகாம்கள் தயார் நிலையில் உள்ளது. மழை வெள்ள பாதிப்பில் இருந்து மக்களை மீட்கவும், பாதுகாத்திடவும் தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருப்பதாக கூறினார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் அவர்கள், கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி.ஹிருத்யா எஸ். விஜயன், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, நீர்வளத் துறை உதவி செயற்பொறியாளர் சிவகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் நரசிங்கபுரம், மகேந்திரபுரம், ராஜதோப்பு உள்ளிட்ட இடங்களில் கழகக் கொடியேற்றி பெண்களுக்கு புடவை பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அசைவ உணவு வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சக்திவேல், மாவட்ட அவைத் தலைவர் மனோகரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மடத்துக்குளம் அரிமா அரங்கத்தில் நடைபெற்ற இரத்த தான முகாமை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், மாவட்டக் கழக அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் துவக்கி வைத்தனர். இதில் மடத்துக்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சாகுல் அமீது, பேரூர் கழக செயலாளர் கலையரசு உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் கிடங்கல் 2 பகுதியில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட திமுக சார்பில் அரிசி உள்ளிட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் வழங்கினார். உடன் திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி வெற்றிவேல்,உள்ளிட்ட திமுக தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமை!

# தஞ்சாவூரில் - தகவல் தொழில்நுட்ப அணி மண்டல ஆய்வுக் கூட்டம்!

## திருவாரூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியினர் பங்கேற்பு!

திருவாரூர், டிச. 15-

தஞ்சையில் நடைபெற்ற தகவல் தொழில் நுட்ப அணியின் மண்டல ஆய்வு மற்றும் ஆலோசனைக்கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தின் தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் தொகுதிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தஞ்சையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், தொழில்முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமை ஏற்றார். கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் அண்ணாதுரை, நாகை மாவட்ட செயலாளர் என்.கௌதமன், பேராவூரணி சட்டமன்றஉறுப்பினர் அசோக்குமார், தஞ்சை மாநகர மேயர் சண். இராமநாதன், துணை மேயர் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், தஞ்சை மண்டலத் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், தஞ்சை மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா, தகவல் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்த ஆய்வு மற்றும் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின்படி திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் பா.அரவிந்த், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.தினேஷ்குமார், பா.சங்கர், ஏ.ஜி.இந்திரஜித், முகமதுபாஷித், சைமன் ராஜ், பத்மபிரியா மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.வினோத், பி.ஆர்.இளையராஜா, ராகோ உதயசூரியன், அ.அன்புபிரபு, கு.வசந்த், ஆர்.பாக்கியசாமி, வசந்தன் புலிகேசி, பௌலின்ஜாய், சினேகா, ரம்யா, விஜய சந்திரிக்கா, அன்பு பிரபு, தனசீலன், டி.வி.பி.குணா, இளவரசன், சீனி.குமார், சீனிவாசன், முகம்மது சப்வான் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.



கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் மற்றும் ஒன்றியச் செயலாளர் முத்துமாணிக்கம் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், 300க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர், அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சுல்தான் பேட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், ரகுதுரைராஜ், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில துணைச் செயலாளர் பணப்பெட்டி தினகரன், சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் சரிதா வீரமுத்து, ஒன்றிய துணை பொதுச்செயலாளர் ஜே.வி.எம்.மணி, செஞ்சேரி புத்தூர் ஊராட்சித் தலைவர் எஸ்.கே.டி. பழனிச்சாமி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய. நகர. பேரூர் பகுதிக்கழக நிர்வாகிகள், திரளானோர் கலந்து கொண்டனர்.

### ஞான.இமையநாதன் தலைமை!

# மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில் இரத்ததானம் முகாம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, டிச.15-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இரத்த தான முகாம் திருவிழந்தூரில் நடைபெற்றது.

முகாமிற்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன் தலைமை தாங்கினார். சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ். செல்வமணி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.முருகமணி ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

ஒன்றிய இளைஞர் அணி எம்.கே. நேதாஜி வரவேற்றார்.

இரத்ததான முகாமை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்து இரத்ததானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பேசினார். மயிலாடுதுறை அரசு மருத்துவ மனை மருத்துவ குழுவினர் 76 பேரிடம் இரத்தத்தை தானமாக பெற்றனர்.

நிகழ்ச்சியில் சீர்காழி ஒன்றியக் கழகச் செயலாளர் பஞ்சுகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள், பி.சிவதாஸ், அ.காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், கென்னடி, அரசு வழக்கறிஞர் இராம.சேயோன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் சௌ.சர்வோதயன், தொ.மு.க. மாநில முன்னாள் பொருளாளர் தமிழரசன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஒன்றிய அவைத் தலைவர் ஜி.பன்னீர்செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகன், சுப. சிற்றரசன், சந்திரவடிவம் ராஜா, பொருளாளர்மோகன்,

மாவட்டக் கழக பிரதிநிதிகள் கே.எஸ்.கண்ணன், கலையரசன், செல்வமணி, ஆர்.கே.சரவணன், தகவல் தொழில் நுட்ப அணி சட்ட தொகுதி ஒருங்கிணைப்பாளர் த.புனித செல்வன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் விஜயகுமார், ஒன்றிய இளைஞர் அணியை சேர்ந்த ஜான், அசோக்குமார், பிரபாகர், முத்துகுமார், தகவல் தொழில் நுட்ப அணி வினோத், பிரபாகரன், கிளை கழக நிர்வாகிகள் ரவி, ரவிச்சந்திரன், விசு, தங்கசாமி, தென்னரசு, துரைசந்திரன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்

### டிசம்பர் 15 (1978)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு ‘உழைப்பாளி’ என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

“இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**